# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● மார்ச் 09, 2024 Weekly E-paper ● March 09, 2024



## புதுவையில் சந்தி சிரிக்கிறது சட்டமும் ஒழுங்கும்!

சுப.வீரபாண்டியன்

## மோடியைக் காப்பாற்றுகிறதா பாரத ஸ்டேட் வங்கி?

சாரதாதேவி

## வடை வாங்கலியோ வடை!

தலையங்கம்

## உயர்நீதி மன்றத்தில் தமிழ்!

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● மார்ச் 09, 2024 Weekly E-paper ● March 09, 2024


# புதுவையில் சந்தி சிரிக்கிறது சட்டமும் ஒழுங்கும்!

**சுப.வீரபாண்டியன்**

தமிழ்நாட்டில் மிகச்சரியாக நடந்து கொண்டிருக்கும் திமுக ஆட்சியைக் குறை சொல்கிறார் பிரதமர் மோடி. திமுக வை அழித்து விடுவேன் என்று பொதுக்கூட்டத்தில் பேசுகிறார். ஒரு கட்சியின் மூன்றாம்தர, நான்காம்தரப் பேச்சாளரைப் போல ஒரு நாட்டின் பிரதமர் பேச முன் வந்திருக்கிறார். அதுவே வரவிருக்கும் தேர்தல் குறித்து அவர்களுக்குள் இருந்து வெளிப்படும் தோல்வி பயத்தை வெளிப்படுத்துகிறது.

ஆனால் ரங்கசாமி என்னும் ஒரு பொம்மையை முதல்வராக உட்கார வைத்து விட்டு, பாஜக நடத்துகிற ஆட்சி புதுவையில் என்னவாக இருக்கிறது என்பது இப்போது வெளிப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆம் தேதி, புதுவை முத்தியால் பேட்டைப் பகுதியில், வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்த ஒன்பது வயதுச் சிறுமி ஆர்த்தியைக் காணவில்லை. பல நாள்கள் தேடிய பின்பு, அந்தச் சிறுமியின் பிணம் ஒரு மூட்டைக்குள் கட்டப்பட்டுச் சாக்கடையில் கிடந்ததைக் கண்டுபிடித்துள்ளனர். அதே பகுதியில் வாழும் விவேகானந்தன், கருணாஸ் ஆகிய இருவர், கஞ்சா அடித்து விட்டு போதையில் அந்தச் சிறு குழந்தையைப் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கி, இறுதியில் கொலையும் செய்து, சாக்கடையில் வீசி எறிந்து இருக்கிறார்கள் என்பதை இப்போது கண்டுபிடித்து உள்ளதாய் காவல்துறை சொல்கிறது!

தமிழ்நாட்டைப் போலன்றி, புதுவை ஒரு சின்ன சிறிய யூனியன் பிரதேசம். அந்தச் சின்னப் பகுதியில் கூட ஆட்சி நடத்த துப்பில்லாதவர்கள், மற்ற மாநிலங்களை எல்லாம் பார்த்துக் குறை சொல்கிறார்கள்.


இப்போது புதுவையே பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. அரசியல்வாதிகள் என்றில்லை, பொதுமக்கள், இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள் என்று அனைத்துத் தரப்பினரும் தெருவுக்கு வந்து போராடுகின்றனர். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வண்டி ஓட்டுநரின் குழந்தைக்கு நேர்ந்திருக்கும் இந்த நிலை புதுவையில் வாழும் மக்கள் அனைவரையும் அச்சுறுத்தியுள்ளது.

கஞ்சா எப்படிக் கட்டுக்கடங்காமல் புதுவைக்குள் வந்தது என்பதைக் கண்டறியாமல், போராடும் மக்களைக் காவல்துறையை முடுக்கிவிட்டு ஒடுக்குகிறது, பின்புறம் இருந்து ஆட்சியை நடத்தும் பாஜக அரசு. போதாக்குறைக்கு மக்களை அடித்து நொறுக்க துணை ராணுவத்தை வேறு வரவழைத்திருக்கிறது.

தமிழ்நாட்டின் ஆளுநர், தேவையற்ற அனைத்தைப் பற்றியும் அன்றாடம் பேசுகின்றார். புதுவை ஆளுநர் தமிழிசையோ. இப்போது அங்கே வாய்மூடி நிற்கிறார்.

ஆர்த்தியின் சாவுக்குப் பொறுப்பேற்று, அரசு பதவி விலக வேண்டும் என்பது இப்போது அங்கே ஓங்கி ஒலிக்கும் குரலாக இருக்கிறது! ●

## மார்ச் 7 – எங்கள் இனமானப் பேராசிரியரின் நினைவு நாள்!



பேசியது குறைவு
உணர்த்தியது மிகுதி!

வகித்தது இரண்டாமிடம்
வரலாற்றில் தனியிடம்!

வெளிப்பட்டது எளிமை!
மறைந்திருந்தது ஞானம்!

அன்பும் அழகும்
அவரிடம் இருந்தன!
ஆம்! அப்படியொரு பெயர்ப் பொருத்தம்!

இன்று அவரது
நினைவு நாள்!
என்றும் வாழும்
அவர் நினைவுதான்!

–சுபவீ

# மோடியைக் காப்பாற்றுகிறதா பாரத ஸ்டேட் வங்கி?

**சாரதாதேவி**



தேர்தல் பத்திரங்கள் அரசமைப்புச் சட்டம் உறுப்பு 19 (1) க்கு விரோதமானவை என்று பிப்ரவரி 15 அன்று தீர்ப்பு வழங்கியது உச்ச நீதிமன்றம். மார்ச் 6 ஆம் நாளுக்குள் தேர்தல் பத்திரம் யார் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற விவரங்களைத் தாக்கல் செய்யுமாறு பாரத ஸ்டேட் வங்கிக்குக் கட்டளை பிறப்பித்தது. ஆனால் பாரத ஸ்டேட் வங்கியோ கெடுவுக்கு ஒரு நாள் முன்னதாக, அதாவது மார்ச் 5 அன்று, தரவுகளைத் தொகுப்பதில் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால், வரும் ஜூன் 30 வரை கால அவகாசம் வேண்டும் என மனு செய்திருக்கிறது.

அதென்ன ஜூன் 30? இன்னும் 110 நாள்கள் தேடும் அளவுக்கு கோடிக்கணக்கான கணக்குகளா என்றால்.. அதுவும் இல்லை. வெறுமனே 22,217 பத்திரங்கள் தான். அதிலும் தேர்தல் பத்திரங்களின் கணக்குப் பதிவிற்காக சிறப்பு மென்பொருள் பயன்படுத்தப் படுவதாக த்தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் பதிலும் அளித்துள்ளது பாரத ஸ்டேட் வங்கி. வங்கிகள் அன்றாடத் தங்கள் கணக்குகளை நேர் செய்யாமல் அடுத்த நாளைக்குச் செல்லமுடியாது. எந்த மாதிரியான கணக்காக இருந்தாலும் அடுத்த ஒரு மணி நேரத்தில் தந்துவிடமுடியும், எல்லா விவரங்களையும். அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு காலாண்டிற்கும் கணக்குகள் முடித்த விவரமும், கணக்காயர்களின் அறிக்கைகளும் இருக்கும். இருந்தும் மேலும் 3 மாதங்கள் தேவைப்படுகிறது என்றால், 'அவர்' பதவியில் இருக்கும் வரை இதை வெளியே வராமல் பார்த்துக்கொள்ள ஒப்பந்தம் போட்டிருக்கிறாரா? அல்லது அதற்குள் தேர்தல் முடிந்துவிடும். பிறகு காட்டினால் என்ன காட்டாவிட்டால் என்ன என்று இருக்கத் திட்டமா? அல்லது பணமாக்கப்படாத தேர்தல் பத்திரங்களை வேறு வழிகளில் பணமாக்கும் முயற்சியா? அல்லது எப்படியும் மீண்டும் பா.ஜ.க. ஆட்சி தான், மொத்தமாக எல்லாவற்றையும் ஒழித்துவிடும் திட்டமா?

இந்த மனுவுக்குப் பின்னால், ஒன்றிய அரசின் பெரிய அழுத்தம் இருப்பது நன்கு தெரிகிறது. இது ஒரு வெட்கக்கேடான செயல் என முன்னாள் வங்கி அதிகாரிகள் தொழிற்சங்கத் தலைவர் தாமஸ் ஃப்ராங்கோ “த நியூஸ் மினிட்” வலையொளிக்கு அளித்த பேட்டியில் சொல்கிறார். பாரத ஸ்டேட் வங்கியின் தலைவர் தினேஷ் குமார்காரா சென்ற ஆண்டு அக்டோபரில் இருந்து இந்த ஆண்டு ஆகஸ்ட் வரை பதவி நீடிப்பு செய்யப்பட்டவர். ஒன்றிய பா.ஜ.க. அரசால் 63 வயது ஆகியும் ஓய்வு பெறாமல் இருக்கிறார் என்றால், அவருடைய பா.ஜ.க. விசுவாசத்தை நாம் உணரலாம். அவரும் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களால் வளர்த்து, பால்வார்க்கப்பட்டு, பல அரசு அதிகாரிகள், நீதிபதிகள் போல, தன் எதிர்கால அரசியல் பதவிக்காக இதைச் செய்திருப்பதாகவே கருத வேண்டி உள்ளது.

உச்ச நீதிமன்றம் இந்த மனுவை ஏற்காமல், உடனடியாக, தேர்தல் பத்திரங்கள் குறித்த தரவுகளைப் பெற்று, முறையான நடவடிக்கைகளை எடுப்பதோடு, பாரத ஸ்டேட் வங்கியின் தலைவர் மீதும் விசாரணையைத் தொடங்கவேண்டும் என்பதே பொறுப்பான குடிமக்களின் எதிர்பார்ப்பு. ●

# உயர்நீதி மன்றத்தில் தமிழ்!

**வெற்றிச் செல்வன்**

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வலியுறுத்தி கடந்த பிப்ரவரி 28 முதல் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பகவத்சிங் தலைமையில் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகில் தொடர் உண்ணாநோன்பு நடைபெற்று வந்தது. கடந்த 06.03.2024 அன்று தமிழ்நாடு அரசின் உறுதிமொழியை ஏற்று உண்ணாநோன்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஒருநாட்டின் நிர்வாகம் என்பது மக்களின் மொழியில் நடைபெற வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் குறித்த புரிதல் மக்களைச் சென்றடையும். நீதிமன்றங்கள் இதற்கு விதிவிலக்கு இல்லை. அந்தந்த மாநில மொழிகளில்தான் உயர்நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் நடைபெற வேண்டும் என்பது நீண்டகாலக் கோரிக்கை. குறிப்பாக, மொழிச் சமத்துவம் குறித்த புரிதலை உடைய தமிழ்நாட்டில் இக்கோரிக்கை வெகு நாட்களாக உள்ளது. இக்கோரிக்கையை வலியுறுத்தி விடுதலை இதழில் 1956ஆம் ஆண்டே எழுதப்பட்டுள்ள தலையங்கமே இதற்குச் சான்று. “நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் தமிழில் நடப்பதை விரைவுபடுத்த வேண்டியது ஆட்சியாளர் கடமையாகும்.

இதற்கு முன்னணி வேலையாக, ஒவ்வொரு சட்டப்புத்தகத்தையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் பொறுப்பையும் செலவையும் ஆட்சியாளரே ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழ்ப் புலவர்களாயுள்ள சட்ட நிபுணர்கள் தமிழ்நாட்டில் பலர் இருக்கின்றனர். இவர்களைக் கொண்டு ஆட்சியாளர் இக்காரியத்தைச் சிறப்பாகவும் விரைவாகவும் செய்து முடிக்கலாம்” என்கிறது விடுதலை தலையங்கம் (01.09.1956). 2006ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்க வேண்டும் என்று தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பிவைத்தது.

அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 348-இன்படி உயர்நீதிமன்றத்தின் ஆட்சிமொழியாக இந்தி அல்லது

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## வடை வாங்கலியோ வடை!




இட்லரோடு இருந்த கோயபல்சைக் 'கோணிப்புளுகன்' என்று மட்டும்தான் சொன்னார்கள். அதையும் தாண்டி போகிற இடமெல்லாம் வாயால் வடைசுடுவதில் மகா வல்லவர் என்ற பட்டத்தையே பெற்றுவிட்டார் பிரதமர் மோடி.

கடந்த பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய பிரதமரிடம் 37, 000 ஆயிரம் கோடி நிதி கேட்டார் நம் முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

இதோ வருகிறேன் என்று நந்தனம் பொதுக்கூட்டத்திற்கு வந்து, தி.மு.கவினர் நிறைய கொள்ளையடித்து வைத்திருக்கிறார்கள். விடமாட்டேன், அவைகளைப் பிடுங்கி மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப் போகிறேன் என்றார் மோடி.

அதுக்கு இது பதிலில்லையே..?

ஒருவேளை வெளிநாட்டுக் கருப்புப் பணத்தைப் பிடுங்கி மக்கள் கணக்கில் எல்லாம் 15 லட்சம் போட்டாரே, அப்படித்தானோ என்னவோ!

அவர் சுட்ட இந்த வடையில் உப்பு கொஞ்சம் தூக்கலாகக் கூடிவிட்டது!

நாட்டு மக்கள் எல்லோரும் என் குடும்பம் என்றும் சொன்னார் பிரதமர்.

அப்படியானால் மணிப்பூரில் பெண்கள் நிர்வாணமாக, பாலியல் வயப்படுத்திக் கொலை, கொள்ளை, வன்முறைகள் நடந்த போது நீங்கள் ஏன் அங்கு போகவில்லை? இதற்கு அவர் சுட்ட வடையைக் காணவில்லை, காக்கா தூக்கிக் கொண்டுப் போய்விட்டது.

நான் தமிழ் மக்களுக்கு நிதி கொடுத்து உதவி செய்திருக்கிறேன் என்று சுட்டார் ஒரு வடையை மோடி அவர்கள்.

உடனே தமிழ்நாடு முதலமைச்சர், வெள்ளப் பாதிப்புக்கே ஒரு ரூபாய் கூட நீங்கள் கொடுக்கவில்லையே. இப்போது மாநில அரசு மூலமாக இல்லாமல், நீங்கள் எங்கே உதவி செய்தீர்கள், என்னென்ன உதவியைச் செய்தீர்கள் என்று சுளீரெனக் கேட்டுவிட்டார். இந்த வடையும் நாறிப்போய்விட்டது.

மோடியிடம் பயிற்சி பெற்றவர் தமிழக ஆளுநர். பெயர் ஆர். என்.ரவி. ஒப்பிலக்கணம் தந்த கால்டுவெல் மற்றும் ஜி.யூ.போப் இருவரும் பள்ளிப்படிப்பைக் கூட முடிக்காதவர்கள் என்று சுட்டாரே இரண்டு வடைகள். குருவை மிஞ்சிய சிஷ்யடு!

பொதுத்தேர்தல் வருவதற்குள் இன்னும் நிறைய வடைகளைச் சுட்டுத் தள்ளுவார்கள்!

கவலை வேண்டாம். அவைகளை எல்லாம் நம் தி.மு.கழகத் தோழர்கள் " மோடி சுட்ட வடை.... மோடி சுட்டவடை" என்று மக்களிடம் கொடுத்து விடுவார்கள், காசு வாங்காமல்! ●

**2ஆம் பக்கம் தொடர்ச்சி**

வேறு மொழிகளை அறிவிக்க, குடியரசுத் தலைவருக்கு அதிகாரம்உள்ளது. அதேநேரம் இதற்கு உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் ஒப்புதலையும் பெற வேண்டும்.

இப்பிரிவின்படி இராஜஸ்தான், அலகாபாத், மத்தியப்பிரதேசம், பாட்னா ஆகிய உயர்நீதிமன்றங்களில் இந்தி வழக்காடும் மொழியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதே உரிமையை மற்ற மாநில மொழிகளுக்கும் வழங்க ஒன்றிய அரசும், உச்சநீதிமன்றமும் தடையாக உள்ளன. இது மொழிச் சமத்துவத்திற்கு எதிரானது. மாநில மொழிகளைவழக்காடுமொழியாகப்பயன்படுத்துவதற்குத் தடையாகவும், மொழிச் சமத்துவத்திற்கு எதிராகவும் உள்ள அரசியலமைப்பின் பிரிவுகள் திருத்தியமைக்கப்படவேண்டும். அதுவே உண்மையான கூட்டாட்சிக்கு அடையாளம் ஆகுமே தவிர, வெறுமனே மேடையில் ஒன்றிரண்டு திருக்குறளை ஒப்புவிப்பது மொழி உரிமைக்கு உதவாது என்பதை ஒன்றிய அரசு புரிந்து கொள்ள வேண்டும். ●

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்

உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன், சாரதாதேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com

மின் அஞ்சல்: karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# ஈரோட்டில் ‘திராவிட மாணவர் பேரவை’

**ஈரோடு பெரியார் மன்றத்தில் 03-03-2024 அன்று தொடங்கப்பெற்ற ‘திராவிட மாணவர் பேரவை ‘அரங்கத்தில் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், தோழர்கள் சிற்பி செல்வராசு, காசு. நாகராசன், எட்வின், செங்கொடி, பேராசிரியர் பாபு, மாவட்டச் செயலாளர் தமிழ்க்குமரன், தலைவர் சேகர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.**


















Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian